DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC.65/2022

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.சாரதா | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A4 Present. A2, A3 absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.)
12.08.2025 at 11.30 A.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது பரமக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 2020 ம் ஆண்டு சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 24.12.2020 ம் தேதி இரவு சுமார் 23.55 மணியளவில் சிக்கல் பஜாரில் நானும், நிலைய காவலர் 2293 திரு.சத்தியமூர்த்தி மற்றும் 1162 திரு.ராஜா ஆகியோருடன் இரவு ரோந்து பணியாக ரோந்து சுற்றி வந்தபோது சிக்கல் ஈ.சி.ஆர் ரோட்டில் உள்ள தேரிருவேலி விலக்கு ரோட்டில் சிறைக்குளம் கிராமத்தை சேர்ந்த யேசுதாஸ் மகன் செல்லதுரை மற்றும் சிக்கல் மேற்கு காலணியை சேர்ந்த சுரைக்கண்ணன் மகன் வடிவேல் ஆகிய இருவரும் சுமார் 15x10 அளவுள்ள கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்து அச்சிடப்பட்ட பிளஸ்போடை வைத்துகொண்டிருந்தவர்களை பார்த்து நான் முன் அனுமதியின்றி பிளக்ஸ்போட் வைக்ககூடாது என்றும் மாண்புமிகு உயர்நீதி மன்றம் மதுரை கிளை கிராமத்தார்களும் , பொதுமக்களும் கூடும் இடத்திலும் இடைஞ்சலாக பிளக்ஸ்போடு வைப்பதற்கு தடை உத்தரவு போடப்பட்டுள்ளது என்று கூறினேன்.

3. அதற்கு செல்லதுரை என்பவர் பிளக்ஸ்போடை கழட்டி சென்ற போது

நான் ஊர் அறிந்த ரவுடியின் பிள்ளை என்றும் எனது அப்பாவுடன் வந்து காவல் நிலையத்தில் பார்த்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன்பின்னர் மறுநாள் 25.12.2020ம் தேதி மாலை 18.58 மணியளவில் நான் சிக்கல் காவல் நிலையத்தில் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு கொண்டிருந்தபோது காவல் நிலையத்திற்குள் மேற்படி செல்லதுரை மற்றும் அவரது தம்பி சகேயு மற்றும் அவரது அப்பா யேசுதாஸ் மற்றும் வடிவேல் ஆகியோர் காவல் நிலையத்திற்குள் அதிக சத்தத்துடன் வந்து எவ எங்க போடை எடுக்க சொன்னது என்று மேஜையை சத்ததுடன் தட்டி அடிக்க வருவதுபோல் வந்து சிக்கல் ரவுடி யேசுதாஸ் வந்திருக்கேன் இப்ப பதில் சொல்லு என்று என்னை பார்த்து சொல்ல வடிவேல் என்பவர் போலிஸ் சொன்னால் ரவுடி குடும்பம் ஆகிய நாங்கள் கேட்ட வேண்டுமாம் நாங்க வைத்ததுதான் சிக்கல் ஊரில் வேதம் என்று வடிவேல் என்பவர் அவர் அணிந்திருந்த கையியை தொடைக்கு மேல் ஏற்றிக்கொண்டு என்னை அடிப்பதற்கு கம்புகளை தேடியபோது செல்லதுரை என்னை பார்த்து நீ போலிசா இருந்தால் என்ன உன்னால் என்னை மயித்தகூட புடுங்க முடியாது என்று அநாகரிகமான வார்த்தைகளால் பேசினார். அதற்கு சகேயு என்பவர் இவகிட்ட என்ன பேச்சு கம்பை எடுடா என்றும் இவ மண்டையை அடிச்சு உடைப்போம் என்று கூறியதோடு அவர்கள் அனைவரும் சேர்ந்து நீ ரோட்டு பக்கம்தான் வருவாய் உன்னை காரைவிட்டு ஏற்றி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். அப்போது நிலையத்தில் பணியில் இருந்த தலைமைக்காவலர் 823 திரு.முனியசாமி, பெண் முதல்நிலைக்காவலர் 1897 திருமதி.செல்வபிரியா மற்றும் காவலர்கள் 2276 திரு.முரளி, 1162 திரு.ராஜா ஆகியோர்கள் அந்த நபர்களை பார்த்து காவல்நிலையத்திற்குள் பிரச்சனை செய்யாமல் வெளியே போங்க

என்று சொன்னதும் அவர்கள் அனைவரும் சென்றுவிட்டார்கள்.

4. அதன் பின்னர் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவை மீறி பொது இடத்தில் பிளக்ஸ்போடு வைத்ததை தடுத்த என்னை காவல் நிலையத்தில் நுழைந்து பணி செய்ய விடாமல் தடுத்தும் என்னை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவமானப்படுத்தும் உள்நோக்கத்துடன் அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்த மேற்படி நபர்கள் மீது நிலைய சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் என்பவரிடம் புகார் அளித்தேன்.
5. என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.** இது சம்பந்தமாக என்னை அன்று நிலைய பொறுப்பு ஏர்வாடி காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ தேதியில் இருந்து அதற்கு முன்பு எவ்வளவு நாள் சிக்கல் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தேன் என்றால் சுமார் 6 மாத காலம். அந்த 6 மாத காலத்தில் எதிரிகள் மீது நான் வேறு எதுவும் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 24.12.2020 ம் தேதி பிளக்ஸ்போடை எடுக்க சொன்னது சம்பந்தமாக செல்லதுரை, வடிவேல் ஆகியோர் மீது வழக்கு எதுவும் பதிவு செய்தேனா என்றால் இல்லை.

2. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் தேரிருவேலி சாலை என்றால் சரிதான். சிக்கலில் இருந்து தேரிருவேலி செல்லும் சாலை ஈ.சி.ஆர் சாலை இல்லை என்றால் சரியல்ல. பிளக்ஸ்போடில் யார் புகைப்படங்கள் உள்ளது என்று எனது புகாரில் கூறவில்லை என்றால் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டுக்கு வாழ்த்து தெரிவித்த வாசங்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். நான் கொடுத்த புகாரில் பிளக்ஸ்போடை எதிரிகள்தான் வைத்தார்கள் என்பதை எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் நான் பார்க்கும் போது பிளக்ஸ்போடை மாட்டிக்கொண்டிருந்தார்கள். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருந்து சுமார் எவ்வளவு நேரம் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் அரைமணி நேரம் கழித்து. முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நேரம் 18.55

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரம் 20.00 மணி. என்னுடைய புகாரில் தனிநபர்கள் யாரும் சம்பவத்தை பார்த்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ சாட்சிகள் அனைவரும் எனக்கு கீழ் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் அவர்கள்தான் பணியில் இருந்தார்கள்.

3. என்னுடைய புகாரில் எதிரிகள் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தார்கள் எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து சென்றார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் பாராக்காவலர் நிலைய பொறுப்பில் இருந்தாரா என்றால் இருந்தார். எதிரிகளை கைது செய்யும் நடவடிக்கையில் நானோ மற்ற காவலர்களோ ஈடுபடவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரில் காவல் நிலையம் பொது இடம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையம் பொது இடம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் தந்தை யேசுதாஸ் சரித்திர பதிவேடு குற்றவாளி என்பது சிக்கல் காவல் நிலைய ஆவணங்களை பார்வையிட்டால் தெரியும் என்றால் சரிதான்.

4. யேசுதாஸ் நான் சொல்வது போல் சரித்திர குற்றவாளி இல்லை என்றால் சரியல்ல. சிறைக்குளம் கிராமத்தினருக்கும் யேசுதாஸ் குடும்பத்தினருக்கும் அடிக்கடி பிரச்சனை வரும் என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி